## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்றத்து இளநிலை உதவியாளர் திருமதி சி. நிர்மலா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : ராஜாபாதர் | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : தியாகராயநகர் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : சென்னை |

**07.07.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நாங்கள் கிரயம் வாங்கி 50 வருடங்களுக்கு மேலாக சென்னையில் இருந்து வந்து பரிபாலனம் செய்து வருகிறோம். தற்போது பிரதிவாதிகள் அவர்களுடையது என பிரச்சனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்தேன் என்று குறிப்பாக சொல்ல முடியாது என்றால் ஆமாம். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** என் சொத்தில் அவர்கள் வந்து பிரச்சனை செய்வதால் வழக்கு தாக்கல் செய்தோம். நான் ஏதேனும் வேலை செய்கிறேனா என்றால் நான் எந்த வேலையும் செய்யவில்லை. எனக்கு வருமானம் இல்லை என்றால் சரிதான்.

4. வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் காலியிடமாக உள்ளதா அல்லது அதில் ஏதேனும் உள்ளதா என்றால் காலியிடமாகதான் உள்ளது. நான் எத்தனை வருடமாக சென்னையில் உள்ளேன் என்றால் 40 வருடங்களாக உள்ளேன். 40 வருடமா 50 வருடமா என்றால் 40 ஆ 50 ஆ என்று தெரியவில்லை. என் குடும்பத்தில் என்னை தவிர வேறு யார் உள்ளார் என்றால் என் மகன் கேசவன் உள்ளார். தாவா சொத்து உள்ள காபுல் கண்டிகையில் எனது உறவினர்களோ மகனோ இருப்பதாக நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.83/2009ன் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. பிரதிவாதிகள் வழக்கு சொத்தை பொறுத்து பிரச்சனை செய்யும்போது பத்திர அலுவலகம் வருவாய் அலுவலகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு மனு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். என்ன விவரம் கூறி அந்த மனு கொடுத்தேன் என்றால் எங்கள் சொத்தை பிரதிவாதிகள் அபகரித்து கொண்டதாக மனு கொடுத்தோம். நான் காவல் நிலையத்திலோ காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலோ புகார் கொடுத்தேனா என்றால் எனக்கு நியாபகமில்லை. காவல் நிலையத்திலோ காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலோ என்ன முடிவு காணப்பட்டது என்பது தெரியுமா என்றால் எனக்கு நியாபகமில்லை. வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சொல்லியுள்ளோம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)